மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தேசியம்

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 94 | 30.06.2023 (வெள்ளிக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 5 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## வடக்கு - கிழக்கில் நடைபெறும்
# புதிய யுத்தம்!
## கருணாகரம் எம்.பி சூளுரை!!




2009இற்குப் பின்னர் வடக்கு கிழக்கிலே சிங்கள மயமாக்கல் எனும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் (29.06.2023) மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், உள்நாட்டுக் கடன்

பக்கம் 4

## மாநாட்டுக்கு வராத வடக்கு மாகாண ஆளுநரால் ஏற்பட்டுள்ள குழப்பநிலை

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக மாநாடு நேற்றைய தினம் (29.06.2023)

பக்கம் 4

## சிங்களவர்களுக்கு விடுதலைப்புலிகள் என்றால் பயம்!
## சாணக்கியன் எம்.பி. பகிரங்கம்!!



சிங்களவர்களுக்கு விடுதலைப்புலிகள் என்றால் பயம் என நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் கூறுகையில்," விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து எங்களுடைய மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் பலர் உயிர் தியாகம் செய்துள்ளனர்.

பக்கம் 4

## அச்சுவேலி சம்பவம் : 25 பெண்கள் உட்பட 31 பேர் கைது!



பக்கம் 4

புத்தூரில் இரண்டு வீடுகளுக்குள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டவர்களில் 25 பெண்கள் உட்பட 31 பேர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் பலரை தேடி பொலிசார் வலை விரித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - புத்தூர் கலை ஒளி கிராமத்தில்

## திட்டமிட்ட குடியேற்றங்களால் கிழக்கில் தமிழர்களின் விகிதம் வீழ்ச்சியடைந்துள்ளது: வியாழேந்திரன் எம்.பி!!



கிழக்கில் மூவின மக்களும் வாழ்ந்து வந்தாலும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் அதிகம் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. அவைகளைத் தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளிடத்தில் உள்ளது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் (29.06.2023) மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், மக்களுடைய உரிமை சார்ந்த விடையத்தில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்கின்றோம்.

இந்த மாகாணத்தைப் பொறுத்தளவில், ஒரு

பக்கம் 4

## தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை!
## அண்ணாமலை கவலை



பக்கம் 4

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்து மக்கள் தொகை குறைந்து வருவது குறித்து தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை கவலை தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் நிகழ்வொன்றில்

## பாபர் மசூதிக்கு நடந்தது - யாழ் தையிட்டி விகாரைக்கு நடக்கும்!
## மைத்திரியிடம் எச்சரித்த சிவசேனை அமைப்பு.!

இந்தியாவில் பாபர் மசூதிக்கு நடந்தது தையிட்டி விகாரைக்கும் நடக்கும் என சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கு தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றுமாறு பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மறவன்புலவு சச்சிதானந்தன் இவ்வாறு தெரிவித்திருந்தார்.



பக்கம் 4

## பட்டினியால் வாடும் மக்களை வாழ வைப்பதற்கு கைகளிலே பணமுள்ள முதலாளிகள் சிந்திக்க வேண்டும் - மைத்திரி

உலகத்தில் மூன்றில் ஒரு பங்கு வறுமையால் வாடும் நிலையில் கோடிகணக்கான பணச் செலவில் ரைட்டான் கப்பலைக் கட்டுவதில் பயனில்லை. பட்டினியால் வாடும் மக்களை வாழ வைப்பதற்கு கைகளிலே பணமுள்ள முதலாளிகள் சிந்திக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதியும் ஹீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனா தெரிவித்துள்ளார்.

பக்கம் 4

# வங்கிகளில் வைப்பு செய்துள்ள வாடிக்கையாளர்களுக்கு
# எந்த பாதிப்பும் ஏற்படாது : மத்திய வங்கி ஆளுநர்



இலங்கையின் வங்கி அமைப்பின் மீது மேலும் சுமைகளை சுமத்தக்கூடாது என தெரிவித்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க வங்கிகளில் வைப்பு செய்த 57 மில்லியன் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

வங்கிகள் ஏற்கனவே 50 வீதத்திற்கும் அதிகமான வரிகள் மூலம் திறைசேரிக்கும் பொருளாதாரத்திற்கும் பங்களிப்பு செய்துள்ளதால் அவற்றின் மீது மேலும் சுமைகளை சுமத்தக்கூடாது என தெரிவித்துள்ளார்

ஏற்கனவே திரட்டப்பட்ட ஊழியர்சேமலாப நிதி மீது அரசாங்கம் கைவக்காது என உறுதியளித்துள்ள மத்திய வங்கி ஆளுநர் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 9 வீத வட்டிக்கு உத்தரவாதம் அளிப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

உள்நாட்டு கடன்மறு சீரமைப்பிற்கான நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெறும்வரை ஊகங்களை தவிர்ப்பதற்காகவே அரசாங்கம் வெள்ளிக்கிழமையை வங்கி விடுமுறையாக அறிவித்தது எனவும் தெரிவித்துள்ளார்.

# சீனா இலங்கையை கடன் பொறிக்குள் சிக்கவைத்ததா?
## மறுக்கிறார் அலிசப்ரி



சீனாவுடன் மேலும் ஒத்துழைப்பிற்கு விருப்பம் வெளியிட்டுள்ள இலங்கை சீனாவின் கடன் பொறி என தெரிவிக்கப்படுவதை நிராகரித்துள்ளது.

சீனாவிற்கான இலங்கை தூதரகத்தில் செய்தியாளர்களை சந்தித்தவேளை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த சில வருடங்களில் சீனா இலங்கையில் பல முதலீடுகளை மேற்கொண்டுள்ளது இருதரப்பிற்கும் பலனளிக்க கூடியநடப்புறவை மேலும் விஸ்தரிப்பதற்கு இலங்கை ஆர்வமாக உள்ளது என அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

சீனாவின் புதிய பட்டுப்பாதை திட்டம் இலங்கையை கடன்பொறிக்குள் சிக்கவைத்துள்ளது என மேற்குலக ஊடகங்கள் தெரிவிப்பதை அலிசப்ரி நிராகரித்துள்ளார்.

சில ஊடகங்கள் தங்கள் நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கின்றன சீனாவின் முதலீடு இலங்கைக்கு மிகமிக முக்கியமானது என தெரிவித்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் 26 வருடங்களாக இலங்கை கடும் அழுத்தத்தில் இருந்தது எந்த முதலீடும் வரவில்லை அனைவரும் கைவிட்டனர் ஆனால் சீனாவின் முதலீடுகள் வந்தன இலங்கையின் அபிவிருத்திக்கு உதவின ஆகவே நாங்கள் இதற்காக மிகவும் நன்றியுடையவர்களாக உள்ளோம் என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அனைத்து கட்சிகளும் சீனாவுடன்சிறந்த உறவை கொண்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான
# விஜயகலா மகேஸ்வரன் பயணித்த வேன் விபத்து





யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் வாகன விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த வாகன விபத்து புத்தளத்தில் நேற்று (29.06.2023) இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த விஜயகலா, புத்தளம் வைத்தியசாலையின் அவசர விபத்து பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவர் பயணித்த வாகனம் மரமொன்றின் மீது மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

விஜயகலா மகேஸ்வரனுடன் வானில் பயணித்த மேலும் மூவர் இந்த விபத்தில் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் விஜயகலா மகேஸ்வரனின் உறவினர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கொக்குதொடுவாயில் மனித எச்சங்கள்
# மீட்பு!!



கொக்குத்தொடுவாய் மத்தி கிராம சேவையாளர் பிரிவில் பிரதான வீதியில் பாடசாலைக்கு அருகாமையில் நீர் வழங்கல் அதிகாரசபையில் நீர் வழங்கல் வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் போது மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொக்குளாய் பொலிசார் விசாரனைகளை மேற்கொண்டு வருவதோடு நாளை நீதிமன்றில் வழக்குதாக்கல் செய்யவுள்ளதாக பொலிசார் தெருவித்தனர்.

## யாழில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்
# விபத்தில் இருவர் உயிரிழப்பு!!





யாழ்.நகர் பகுதிக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - அராலி , வட்டுக்கோட்டை வீதியில் கல்லுண்டாய் வெளி பகுதியில் நேற்றைய தினம் வியாழக்கிழமை மதியம் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

குறித்த விபத்தில் வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த, யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகஸ்தரான மகேஸ்வரன் மயூரன் ( வயது 37) மற்றும் அவருடன் பயணித்த வாகனங்கள் பழுது பார்க்கும் (மெக்கானிக்) அராலி மத்தியை சேர்ந்த ஜெயசுந்தரம் சரோஜன் (வயது 29) ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்தித்தார்
# கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்!



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையின் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்தமை சிறப்பான விடயம் எங்களின் அபிவிருத்தி கூட்டாண்மை குறித்து ஆராய்ந்தோம்.எதிர்கால ஒத்துழைப்பிற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்தோம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் தனது டுவிட்டர் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை எங்கள் அயல் நாடுகளிற்கு முதலிடம் என்ற கொள்கையில் முக்கியமான இடத்தில் உள்ளது என இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.



# கனடாவில் பிரதி அமைச்சராக இலங்கையை பூர்விகமாக கொண்ட பெண் நியமனம்!



இலங்கையை பூர்விகமாக கொண்ட துஷாரா வில்லியம்ஸ் கனடா அரசாங்கத்தின் பிரைவி கவுன்சில் அலுவலகத்தில் அரசாங்கங்களுக்கு இடையிலான விவகாரங்களுக்கான பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஜூன் 19 ஆம் திகதி முதல் பிரதி அமைச்சராக நியமனம் பெற்றுள்ளார். இதற்கு முன்னர் துஷாரா வில்லியம்ஸ் கனடா நிதித்துறையின் இணை உதவி துணை அமைச்சராக பணியாற்றியுள்ளார். கனடாவின் பொதுச் சேவையில் இலங்கையை பூர்விகமாக கொண்ட முதல் பெண் பிரதி அமைச்சராக வில்லியம்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட துஷாரா வில்லியம்ஸ், தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை கொழும்பில் உள்ள மகளிர் கல்லூரியில் பயின்றுள்ளார். பின்னர் 991 இல் கனடாவுக்கு இடம்பெயர்ந்துள்ளார். அவர் பி.ஏ. சர்வதேச உறவுகள் மற்றும் சர்வதேச அபிவிருத்திகள் தொடர்பான பட்டப்படிப்பு ஆகிய இரண்டு பட்டப்படிப்புக்களையும் கனடாவிலுள்ள டொராண்டோ பல்கலைக்கழகத்தில் பயின்றுள்ளார்.

தனது பட்டப்படிப்பை நிறைவு செய்த வில்லியம்ஸ் இலங்கையில் உள்ள கொள்கைக் கற்கைகள் நிறுவனத்தில் சிறிது காலம் பணியாற்றினார்.

வில்லியம்ஸ் 2001 இல் கனேடிய சிவில் சேவையில் சேர்ந்தார். சமூக, பொருளாதாரம் மற்றும் நிதி போன்ற பொதுக் கொள்கைப் பகுதிகளின் சிவில் சேவையில் பல வருட அனுபவம் என்பன அவர் இந்த நிலையை அடைய காரணமாக இருந்துள்ளது.

# அரசாங்கத்தின் நலன்புரி உதவித் திட்ட பதிவுகளில் முறைகேடு :

## கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துக்கு முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டம்







அரசாங்கத்தின் நலன்புரித் உதவித் திட்ட பதிவுகளில் முறைகேடு எனவும், தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் முறைகேடுகள் எனவும் தெரிவித்து கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகம் முன் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று வியாழக்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய தினம் காலை ஓட்டமாவடி கொழும்பு வீதியில் ஒன்று கூடிய பிறைந்துறைச் சேனை 204 ஏ பிரிவு சமுர்த்தி பயனாளிகளால் வாசகங்கள் எழுதிய பதாதைகளை கையில் ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் ஊர்வலமாக ஓட்டமாவடி, கொழும்பு பிரதான வீதி வழியாக பிரதேச செயலகம் வரை நடந்து சென்றனர்.

அரசாங்கத்தின் நலன்புரி உதவிதிட்டகொடுப்பனவுகள் வழங்குவதற்கான பெயர் பட்டியல் அண்மையில் வெளிவந்திருந்த நிலையில் இரு நேரம் மட்டும் உணவை உட்கொண்டு வாழ்பவர்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள், முதியோர்கள், விதவைகள், உட்பட வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களின் பெயர்கள் உள்வாங்கப்படாமல் வெளிநாடுகளில் இருப்போர், வசதியானவர்களுக்கே இவ் உதவி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தே இவ் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பிரதேச செயலகம் கோறளைப்பற்று மத்தி வளாகத்தில் ஒன்று கூடிய மக்கள் தமக்கு நீதி கோரி போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். அதன் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோரிக்கை அடங்கிய மகஜரை செயலக திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.றுவைஸ் பெற்றுக்கொண்டார். மக்களுடன் சம்பவம் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

இது கிடைக்கதாவர்கள் மேன்முறையீடு செய்யலாம் என்றும் தகுதியற்வர்கள் தொடர்பாகவும் தெரியப்படுத்துமாறும் மேன் முறையீடு செய்வதற்காக அலுவலகத்தில் சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்ததுடன் உடனடியாக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டார்.

# யாழ் குடாக்கடல் பத்து வருடங்களில் சேற்றுக் கடலாக மாறும் :

## சமூக செயற்பாட்டாளர் செல்வின் கருத்து!



யாழ். குடா கடல் பாரம்பரிய கடற்தொழிலில் இருந்து விலகி அட்டை பண்ணை தொழில் விஸ்தரிக்கப்படுவதால் இன்னும் பத்து வருடங்களில் குடாக் கடல் சேற்றுக் கடலாக மாறுவதை யாரும் தடுக்க முடியாது என சமூக செயற்பாட்டாளர் எஸ். செல்வின் தெரிவித்தார்.

உலக வாங்கியால் வெளியிடப்பட்ட கடல் அட்டை பண்ணை தொடர்பில் கடத்தொழில் சங்கங்களுக்கு விழிப்புணர் கூட்டம் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள ஆழம் குறைந்த கடற்கரைகளில் எவ்வித பரந்துபட்ட ஆய்வுகளும் திட்ட மிடல்களும் இன்றி கடல் அட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது.

கடலட்டை பண்ணைகளால் கடல்வாழ் உணவுச் சங்கிலியில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் இது கடல்வாழ் உயிரினங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மட்டுமல்ல ஒட்டுமொத்த உயிர்ப் பல்வகைமையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

வடக்கு மக்கள் மட்டுமின்றி இலங்கையில் வாழும் மக்கள் கடல் அட்டையை உணவு தேவைக்காக பயன்படுத்தாத நிலையில் டொலரைப் பெறப் போகிறோம் எனக்கூறி வெளி நாடுகளுக்கு எமது பாரம்பரிய கடல் வளத்தை விற்க முடியாது.

அதுமட்டுமல்லாது கடல் மேலாண்மைக்காக கட்டமைக்கப்பட்ட கடற்கரையோர மீனவ மக்களின் வாழ்க்கை முறையை அட்டைப் பண்ணை என்ற பெயரில் பல் தேசியக் கம்பெனிகளை வளர்ப்பதற்காக எமது மக்களையோ கடல் வளத்தையோ அழிக்க முடியாது.


எமக்கு பொருத்தமற்ற கடல் அட்டப் பண்ணைக்கான அட்டைக் குஞ்சுகளை யாரோ ஒரு வெளிநாடு சக்தியின் வழங்கிவரும் நிலையில் அறுவடை செய்யும் போது விலையையும் அவர்களை நிர்ணயம் செய்கிறார்கள்.

சில வேளை குஞ்சுகளை வழங்கியவர்கள் அறுவடை காலத்தில் அதனை ஏற்றுமதி செய்யாவிட்டால் பாதிக்கப்படுவது எமது மீனவர்கள்.

40 நாள் கோழி குஞ்சை வளர்த்து முட்டை பெறமுடியாத எமது அரசாங்கம் சீனாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்யும் நிலையில் பிளாஸ்டிக் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டதாக பேசப்பட்டமை யாவரும் அறிந்ததே.

ஆகவே எமது மக்கள் மரபுகளுக்கு உட்பட்டு அறங்களின்பால் மேற்கொள்ளும் கடற்தொழிலினை வெளிநாட்டு சக்திகளுக்கும் பினாமி நிறுவனங்களின் தேவைக்காக மாற்றும் முயற்சியை கைவிட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமூக செயற்பாட்டாளர் ஜெயக்குமார் ரிஐடியினரால் 3 மணிநேரம் விசாரணை!



விவேகானந்தநகர் கிராம அபிவிருத்தி சங்கம், கரைச்சி பிரதேசத்துக்குட்பட்ட கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் என்பவற்றின் தலைவரும், கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கம், கிளிநொச்சி சேவைச்சந்தை வர்த்தகர் அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் உபதலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி கரைச்சிக் கோட்டக் கிளையின் செயலாளருமான திரு.கறுப்பையா ஜெயக்குமார் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் (TID) விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை (27) பரந்தனில் உள்ள பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவின் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்ட இவர், ஏறத்தாழ மூன்று மணிநேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்

கனகபுரம் துயிலுமில்ல மாவீரர் பணிக்குழுவின் தலைவரும் அதிபருமான தங்கவேலு கண்ணபிரான், செயலாளர் வீரவாகு விஜயகுமார் ஆகியோர் ஏற்கனவே பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், அப் பணிக்குழுவின் பொருளாளரான கறுப்பையா ஜெயக்குமாரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை திட்டமிட்ட செயற்பாடாகத் தென்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

# கிளிநொச்சி துப்பாக்கிச் சூடு : சந்தேகநபர்கள் கைது சிக்கிய ஆதாரங்கள்







கிளிநொச்சியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் சேர்த்து சூட்டு சம்பவத்துக்கு பாவிக்கப்பட்ட இடியன் துப்பாக்கியும் மோட்டார் சைக்கிளும் கணேசபுரம் பகுதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளது.

விரைந்து செயல்பட்ட கிளிநொச்சி மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவினர் கிளிநொச்சி கணேசபுரம் பகுதி வயல் வெளியில் மறைத்து வைக்கப்பட்ட இடியன் துப்பாக்கி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவற்றை நேற்று பகல் 1.00 மணியளவில் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவட்ட குற்ற புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



## வடக்கு - கிழக்கில் நடைபெறும்...

மறுசீரமைப்புக்காக முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருவதுடன், அதற்காக அமைச்சரவை அனுமதி கொடுத்து நாடாளுமன்றத்தில் சட்ட மூலமும் வரவுள்ளது.

ஆனாலும் இந்த பொருளாதாரச் சூழலுக்கு என்ன காரணம் என்பதை எமது அரசியல் தலைவர்கள் அறிந்தும் அதற்கான தீர்வைக் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலையிலேயே இன்றும் இருக்கின்றார்கள்.

வடக்கு கிழக்கிலே சிறிய சிறிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடைபெற்று வந்தாலும், வடகிழக்கில் சிங்கள மயமாக்கல் மேலோங்கி யிருக்கின்றது.

கோட்டபாய ராஜபக்ச காலத்தில் அமைச்சர்களாக இருந்த உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, சரத் வீரசேகர போன்றவர்கள், சிங்கள மயமாக்கலுக்கு உறுதுணையாக இருக்கின்றார்கள்.

அரசு இன பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு முயற்சியில் 50 சதவீதம், நிறைவேறியுள்ளதாக ஜனாதிபதி லண்டனில் வைத்துத் தெரிவித்தார். ஆனால், அதை எந்த விததலும் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது வேறு பொருளாதார ரீதியான அபிவிருத்தி என்பது வேறு.

இந்த அரசாங்கம் வந்த பின்னர் ஒரு சில நல்ல காரியங்கள் செய்திருக்கின்றன. அதனை நாம் மறந்துவிட முடியாது.

காணி விடுவிப்புக்கள் நடைபெற்றிருக்கின்றன, கூடுதலான அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

அத்துடன், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள், பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு இணைந்த வடகிழக்கிலே ஒரு நிரந்தரமான ஒரு தீர்வைக் கொண்டு வருவதற்கான எந்த வொரு முயற்சியும், எடுக்கப்படவில்லை.

2009ஆம் ஆண்டு வரையில் இந்த நாட்டிலே ஆயுதப் போராட்டம் நடந்தது. 2009இற்குப் பின்னர் இந்த நாட்டின் வடக்கு கிழக்கிலே சிங்கள மயமாக்கல் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அந்த யுத்தத்திற்கு ஜனாதிபதி அவர்கள் ஒத்துழைப்பு வழங்காவிட்டாலும் அரச இயந்திரங்கள், அரச அதிகாரிகள் இராணுவத்துடன் இணைந்து அந்த வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் மக்களுடைய முன்னேற்றம், அபிவிருத்திக்குத்தான் நான் முதலிடம் கொடுப்பேன், அதற்காக நான் அரசுடன் இணைந்து இந்த வேலைகளைச் செய்ய வேண்டும் என்றில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே மட்டக்களப்பு மாவட்டத்தில் 256 பேர் போட்டியிட்டு 5 பேர் மாத்திரமே வெற்றி பெற்றுள்ளோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் கட்சி சார்ந்து செயற்படக் கூடாது என்பது எனது உறுதியான கொள்கையாகும் எனத் தெரிவித்துள்ளார்.

## அச்சுவேலி சம்பவம் : 25 பெண்...

இளைஞர்கள் இருவரின் வீடுகளுக்குள் புகுந்த 50 இற்கும் மேற்பட்டோர் இருவரையும் தாக்கியதுடன் பெறுமதியான பொருள்களையும் அடித்து சேதப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் இரண்டு வீடுகளும் முற்றிலும் சேதமடைந்ததுடன் இரண்டு இளைஞர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.சம்பவத்தின் போது காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

பெண்களின் ஒளிப்படங்களை கணினியில் கிராபிக் செய்து சமூக ஊடகங்களில் வெளியிட்டனர் என்ற அடிப்படையில் 21 வயது தொடக்கம் 25 வயதான இளைஞர்கள் இருவரின் வீடு மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தியே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தூர் கலை ஒளி கிராமத்தைச் சேர்ந்த பெண்களின் படங்களை கணினியில் கிராபிக் செய்து அசிங்கமாக சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டன என்று அச்சுவேலி பொலிஸ் நிலையம் ஊடாக சைபர் குற்றப் பிரிவில் மூன்று மாதங்களுக்கு முன்னர் முறையிட்ட நிலையில் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படாமையே குறித்த வன்முறைக்கு காரணம் என தெரிய வருகிறது.

வன்முறை சம்பவம் தொடர்பிலான மேலும் பலரை கைது செய்ய அச்சுவேலி பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சிங்களவர்களுக்கு விடுதலைப்...

நாடாளுமன்றத்தில் இருக்கும் பெரும்பாலான எம்.பிக்கள் என்னை பலவாறு தாக்கி பேசியுள்ளனர்.

அவர்களுக்கு இருக்கும் பிரச்சினை நான் சிங்கள மொழியில் பேசும் போது சிங்களவர்கள் மத்தியிலும் எனது கருத்து செல்கின்றது.

எனவே தமிழர்களுக்கு பிரச்சினை உள்ளதாக சிங்கள மக்கள் யோசிக்கும் போது, அது தங்களுக்கு பாதகமாக அமையும் என நினைக்கிறார்கள்.

சிங்கள மக்களை கொல்வதுதான் புலிகளின் நோக்கம் என அவர்கள் நினைக்கிறார்கள் மற்றும் சிங்களவர்களுக்கு விடுதலைபுலிகள் என்றால் பயம்."என கூறியுள்ளார்.

## மாநாட்டுக்கு வராத வடக்கு...

இடம்பெற்றது. யாழ்.நல்லூரில் ஆரம்பமான மாநாட்டுக்கான பேரணியானது யாழ். வீர சிங்கம் மண்டபத்தை வந்தடைந்த நிலையில், தேசியக்கொடி ஏற்றுவதற்காக பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட வட மாகாண ஆளுநர் வராததமையால் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களும் மக்களும் வெளியில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை ஆளுநர் வருவாரா? வரமாட்டாரா? என்ற தகவல் வழங்கப்படாத நிலையில் ஏற்பாட்டாளர்கள் தடுமாற்றமடைந்துள்ளனர்.

இறுதியில் ஆளுநர் வருகை தராத சூழ்நிலையில் இலங்கை தேசிய கொடியினை யாழ். மாநகர ஆணையாளர் ஜெசீலன் ஏற்றியுள்ளார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா, ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளர் இளங்கோவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

## திட்டமிட்ட குடியேற்றங்களால்...

வலிமையான அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதன் மூலமே எங்கள் இனத்தினுடைய இருப்பை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்ற தீர்க்கமாகக் கொள்கையுடன் பயணிக்கின்றோம்.

எனவே, உரிமை சார்ந்த விடயத்தில் எவ்வளவு விவேகமாகப் பயணிக்கிறோமோ, அதற்குச் சமமாக அபிவிருத்தி சார்ந்த விடயத்திலும் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்.

மாவட்டத்தின் அபிவிருத்தி சார்ந்த விடயங்களும் உரிமைக்குச் சமமாக முன்னெடுக்கப்படல் வேண்டும். கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தமிழர்கள்.

பல திட்டமிட்ட குடியேற்றங்களால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இன விகிதாசாரம் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

எனவேதான் எமது மக்களுடைய உரிமை சார்ந்த விடயங்களுக்குச் சமமான அபிவிருத்தி சார்ந்த வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டிய தார்மீக பொறுப்பு எம்மிடம் சுமத்தப்பட்டுள்ளது.

அதுபோல் கல்வி, சுகாதாரம், உள்ளிட்ட பல விடயங்களிலும் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளோம்.

கிழக்கு மாகாணத்தில் 58.9 சதவீதமாகவிருந்த தமிழர்கள், தற்போது 38.6 சத வீதத்திற்கு வந்திருக்கின்றார்கள். இதற்குக் காரணம் கடந்த காலத்திலே மேற்கொண்டிருந்த திட்டமிட்ட குடியேற்றங்களாகும்.

இந்நிலையில், வரலாற்றிலே கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. தற்போதுதான் ஜனாதிபதி தமிழர் ஒருவரைக் கிழக்கு மாகாணத்தின் ஆளுநராக நியமித்திருக்கின்றார். இது வரவேற்கக் கூடிய விடையமாகும்.

நாம் இன்னுமொரு இனத்தின் உடைமைகளைத் தட்டிப்பறிக்க வில்லை, மாறாக எமது இனத்தினுடைய விடயங்களை விட்டுக்கொடுக்கவும் தயாரில்லை.

தற்போதைய ஆளுநர் செந்தில் தொண்டமான் அனைத்து இனங்களையும் சமமாக மதித்து வேலை செய்து கொண்டு வருகின்றார்.

ஆனால், முன்னாள் கிழக்கு மாகாணத்தின் ஆளுநராக இருந்த பெண்ணின் செயற்பாடுகள் ஒரு இனத்தை மாத்திரம் வைத்துச் செயற்பட்டதியதாகக் காணப்பட்டது.

இதுகுறித்து முன்னாள் ஜனாதிபதி, தற்போதைய ஜனாதிபதியுடனும் பேசியிருந்தோம்.

கிழக்கில் மூவின மக்களும் வாழ்ந்து வந்தாலும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் அதிகம் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. அவைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளிடத்தில் உள்ளது.

நான் ஆளும் கட்சியில் இருந்தாலும் தவறுகளைச் சுட்டிப்பாட்டிக் கொண்டு மக்களுக்குச் சார்பாகத்தான் செயற்பட்டு வருகின்றேன்.

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, தொல்பொருள் திணைக்களம் போன்றவற்றின் திணைக்களத் தலைவர்கள் மேல்மட்ட உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், போரதீவுப் பற்றுப பிரதேச செயலாளர் ஆர்.இராகுலநாயகி, மற்றும் அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களுக்கும் சிங்களவர்...

கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் பேதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், "இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்து மக்கள் தொகையில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த போக்கு எதிர்காலத்தில் தமிழர்களின் கலாசாரத்திற்கு பாரிய சிக்கலாக அமையும் என்பதால் கவலை அளிக்கிறது.

மேலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு தனித்துவமான கலாசாரத்தையும் அடையாளத்தையும் பேணி வருகின்றன.

அண்மைக்காலமாக இந்த பகுதிகளில் பௌத்த தொல்பொருள் இடங்கள் தோன்றியமை ஈழத் தமிழர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காண்பது நிலையான அமைதிக்கு வழிவகுக்கும்."என தெரிவித்துள்ளார்.

## பாபர் மசூதிக்கு நடந்தது...

வடக்கு கிழக்கிலுள்ள சைவப் பகுதிகளில் பிற மதத்தவர் அடாத்தாக கட்டுகின்ற மத தலங்கள் அனைத்தும் பாபர் மசூதிகளே என்றும் மைத்திரிபால சிறிசேனாவிடம் மறவன்புலவு சச்சிதானந்தன் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கையிலுள்ள இந்துக்களுக்கு இந்தியாவிலுள்ள 120 கோடி இந்துக்கள் ஆதரவாக உள்ளதாகவும்

ஒவ்வொரு சிவலிங்கத்தின் மீது பிற மதத்தவர்கள் கைவைக்கும் பொது காஸ்மீரில் இருந்து கதிர்காமம் வரைக்கும் உள்ள ஒவ்வொரு சைவர்களும் கணணீர் வடிப்பதாகவும் மறவன்புலவு சச்சிதானந்தன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் பாபர் மசூதிகளை உருவாக்க வேண்டாம் என்றும் பௌத்த சமயத்திற்கு கொடுக்கும் முன்னுரிமையை விடவும் சைவ சமயத்திற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்றும் மறவன்புலவு சச்சிதானந்தன் மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மைத்திரிபால சிறிசேன உண்மையில் சைவர் என்றும் உலகத்திற்காக பௌத்தராக வாழ்வதாகவும் மறவன்புலவு சச்சிதானந்தன் குறிப்பிட்டுள்ளார்.

## பட்டினியால் வாடும் மக்களை...

நேற்று மாலை கோண்டாவிலில் புதிதாக அமைக்கப்பட்ட மக்கள் நலன்பேணும் அமைப்பின் கட்டடத் தொகுதித் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரை ஆற்றும் போதே இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டிலும் வருமான வேறுபாட்டை இல்லாமல் செய்தால் தான் வறுமைக் கோட்டுக்குள் உள்ள மக்களைக் குறைக்க முடியும். நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வேலை செய்யவில்லையென சில பேர் கூறுகின்றார்கள்.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வட கிழக்கில் ஜனாதிபதி செயலணி உருவாக்கி கோடிக்கணக்கான பணம் மூலம் அபிவிருத்தியை மேற்கொண்டேன். இச் செயலணிக்கான பணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினூடாகவே வழங்கப்பட்டது

யாழ் போதான வைத்தியசாலைக் கட்டடத்திற்கு சுகாதார அமைச்சராக இருந்த காலத்தில் அடிக்கல் நாட்டி ஜனாதிபதியாக இருந்த காலத்தில் திறந்து வைத்தேன்.

யுத்தத்தின் பின் பலாலி விமான நிலையம் தடைப்பட்டிருந்த நிலையில் எனது காலத்தில் மீள புனரமைத்து இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான விமான மூல பயணத்திற்கு வழிவகுத்தேன்.

நீண்ட காலமாக இராணுவத்தால் அதியுயர் பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட காணிகளில் 98% காணிகளை மக்கள் பாவனைக்காக விடுவித்ததுடன் மீள் குடியேறிய மக்களுக்கு இந்தியவின் உதவியுடன் வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகளையும் எடுத்தேன்

இதே வேளை எனது காலத்தில் காங்கேசன் துறைப் பகுதியில் கட்டப்பட்ட ஜனாதிபதி மாளிகையின் வேலைத்திட்டம் நிறைவுறாமல் இருந்தது. அது முடிவுற்றிருந்தால் ரென்டர் மூலம் தனியாருக்கு வழங்கி வருமானமீட்ட நடவடிக்கை எடுத்திருப்பேன்.

எது எவ்வாறாயினும் சில ஊடகங்களும் ஊடகவியளாளர்களும் என்னை பொய்யான தகவல்களை பயன்படுத்தி எழுதுகிறார்கள்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் நான் அமைச்சராக இருந்த போது என்னைக் கொல்ல வந்தவருக்கு ஜனாதிபதியாக வந்தவுடன் மன்னிப்பளித்து அவரது குடும்பத்துடன் இணைத்தமையை நான் செய்த பாக்கியமாகவே கருதுகிறேன்.

இந்த நாட்டு மக்கள் அனைவரும் இலங்கையர்கள் என்ற நோக்குடன் ஒன்று சேர வேண்டும். எனக் குறிப்பிட்டார்.




தேசியம் பத்திரிகையின்
மின்னிதழை பெற
இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில்
இணைந்து கொள்ளுங்கள்..!
SCAN ME

# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS



அ.கிருபாகரன்
-அதிபர்-

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |





# வெளிவந்துவிட்டது!

தமிழர் தாயகம் எங்கும்!

வார இதழ் தேசியம் THESIYAM තේසියම් www.thesiyamnews.com

பத்திரிகை!



கல்வி,சமூக,அரசியல் வாராந்த இதழ்!



## வெளிவரும்

தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்

தேசியம் THESIYAM තේසියම් www.thesiyamnews.com

NEWSPAPER SIZES, RATE PER EDITION

WEEKLY NEWSPAPER

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Page Top | 2000/= | Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 4000/= | Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 6000/= | Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 8000/= | Back Half Page | 10000/= |
| Back Full Page | 12000/= | Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 3500/= | Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 6000/= | Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 10000/= | Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 800/= | Inner Box Ad | 1200/= |

Tel : 021 222 7557 | +94 76 567 3339
E-mail : thesiyamnews@gmail.com
Web : www.thesiyamnews.com




இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.